# பொருளாதார சூழ்நிலையில் நல்ல மாற்றம் ஏற்பட்டுள்ளது; வருவாய் வளர்ச்சி அதிகரிக்கும்

# நிதிப் பற்றாக்குறை, கடன் கட்டுப்பாட்டுக்குள் உள்ளது; யாரும் கவலைப்பட தேவையில்லை

## சட்டசபையில் துணை முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் பதில்

சென்னை, ஜூலை 6–

**நிதிப் பாற்றக்குயைும், நிலுவை கடனும் கட்டுப்பாட்டுக்கள் உள்ளது. யாரும் கவலைப்பட தேவை இல்லை என்று சட்டசபையில் துணை முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் கூறினார்.**

சட்டசபையில் தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் கே.என்.நேரு பேசுகையில், தமிழக அரசு நிதிப்பற்றாக்குறை மற்றும் கடன்சுமையில் உள்ளது என்று பேசினார்.

இதற்கு துணை முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் பதில் அளித்து பேசினார்.

அவர் பேசியதாவது:– இந்தக் கடன் பற்றிய விவரங்களையும், நிதிப் பற்றாக்குறை எப்படி ஏற்பட்டது என்ற விளக்கத்தையும், வருவாய்ப் பற்றாக்குறை எப்படியெல்லாம் மொத்தம் சேர்ந்தது என்பது பற்றியும், வட்டி செலுத்தியது குறித்தும் ஏற்கெனவே இந்த அவையில் பல முறை விளக்கமாக சொல்லப்பட்டிருக்கிறது. உறுப்பினர், இப்பொழுது மீண்டும் அதைக் கிளப்புவதால், நான் சில விளக்கங்களை இந்தமாமன்றத்திற்கு தெரிவிப்பதற்குக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பொதுவாகவே, உலக அளவில் பல்வேறு நாடுகளும், மத்திய அரசும், மாநில அரசுகளும் ஆண்டுதோறும் கடன் பெறுவதும், பெற்ற கடன்களை அரசுப்பணிகளுக்கு பயன்படுத்துவதும் நடைமுறையில் உள்ள வழக்கம் தான். 2015–2016–ம் ஆண்டு இறுதியில் தமிழ்நாடு அரசினுடைய மொத்த நிலுவைக் கடன் 2.11 லட்சம் கோடி ரூபாயாக இருந்தது. இது, 20162017–ம் ஆண்டு இறுதியில், தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகக் கடன் 22,815 கோடி ரூபாயை அரசு ஏற்றுக்கொண்டதன் விளைவாக, மொத்த நிலுவைக் கடன் அளவு 2.71 லட்சம் கோடி ரூபாயாக உயர்ந்தது.

### மற்ற மாநிலங்களில்...

2017–2018–ம் ஆண்டு திருத்த மதிப்பீடுகளின்படி, இந்த நடப்பாண்டு இறுதியில் நிலுவைக் கடன் 3.12 லட்சம் கோடி ரூபாயாகவும், 2018 –2019–ம் ஆண்டின் இறுதியில் 3.56 லட்சம் கோடி ரூபாயாகவும் இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் நிலுவைக் கடனை மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது தான், நமது மாநிலத்தினுடைய கடன் நிலை பற்றி நன்கு அறிய முடியும். 2018–2019–ம் ஆண்டின் இறுதியில், மேற்கு வங்காளத்தினுடைய கடன் 3.94 லட்சம் கோடி ரூபாயாகவும், உத்திரப்பிரதேசத்தினுடைய கடன் 4.43 லட்சம் கோடி ரூபாயாகவும், மகாராஷ்டிராவின் கடன் 4.61 லட்சம் கோடி ரூபாயாகவும், தமிழ்நாட்டின் கடன் 3.56 லட்சம் கோடி ரூபாயாகவும் இருக்கும் என்பதையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

ஆண்டுதோறும் கடன் பெறுவதில் நிகரக் கடன் அளவு உயர்ந்து வந்தாலும், பொருளாதார உற்பத்தி மதிப்பும் உயர்ந்து வருவதால், மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் கடன் அளவின் விகிதாச்சாரமே கடன் அளவை சரியாகக் குறிப்பிடும் அளவுகோலாகும். ஏனெனில், ஆண்டு தோறும் பொருளாதார உற்பத்தி மதிப்பு உயர்ந்து வரும் நிலையில், கடனை திரும்ப செலுத்துவதற்கான அரசின் திறனும் அதிகரித்த வண்ணம் இருக்கும். எனவே தான், மத்திய நிதிக் குழு, கடனைப் பொறுத்த வரை, மாநிலத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் 25 சதவிகிதத்திற்குள் இருக்க வேண்டும் என்ற ஒரு வழிமுறையை வகுத்துத் தந்துள்ளது.

### விகிதாச்சாரம்

இந்த விகிதாச்சாரம் தமிழ்நாடு அரசைப் பொறுத்த வரையில், 2015–2016–ம் ஆண்டில் 17.41 சதவிகிதமாகவும், 2016 – 2017 –ம் ஆண்டில் 20.27 சதவிகிதமாகவும், 2017 –2018–ம் ஆண்டு திருத்த மதிப்பீடுகளில் 21.58 சதவிகிதமாகவும், 2018 –2019 –ம் ஆண்டு வரவு – செலவுத் திட்டமதிப்பீடுகளில் 22.29 சதவிகிதமாகவும் இருக்கும் எனவும் கணிக்கப்பட்டிருக்கிறது.

மத்திய அரசும், பிற மாநில அரசுகளும் பொதுக்கடன் பெற்று தான் மூலதனச் செலவினங்கள் உட்பட பிற செலவினங்களை மேற்கொள்கின்றன. உதாரணமாக, மத்திய அரசு, 2018–2019 ஆம் ஆண்டு வரவு – செலவுத் திட்டத்தில், 2018 –2019 ஆம் ஆண்டு இறுதியில் மொத்த நிலுவைக் கடன் 89.58 லட்சம் கோடி ரூபாயாக, அதாவது, நாட்டின் மொத்த உற்பத்தி மதிப்பில் 48.80 சதவிகிதமாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

மொத்தக் கடன் நிலுவைக்கும், மொத்த மாநில உற்பத்தி மதிப்பிற்குமான விகிதாச்சாரம், 2018 –2019 ஆம் ஆண்டு வரவு – செலவுத் திட்டமதிப்பீடுகளின்படி, ஆந்திரப்பிரதேசத்தைப் பொறுத்தவரையில், 24.09 சதவிகிதமாகவும், மத்தியப்பிரதேசத்தைப் பொறுத்தவரையில் 26.34 சதவிகிதமாகவும், கேரளாவைப் பொறுத்தவரையில் 30.70 சதவிகிதமாகவும், உத்திரப்பிரதேசத்தைப் பொறுத்தவரையில் 29.78 சதவிகிதமாகவும், மேற்கு வங்காளத்தைப் பொறுத்தவரையில் 37.63 சதவிகிதமாகவும், தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் 2017 – 2018 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடுகளின்படி, 21.58 சதவிகிதமாகவும், 2018 – 2019 ஆம் ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தின்படி, 22.29 சதவிகிதமாகவும் இருக்கும் என கணக்கிடப்பட்டுள்ளது.

### உதய் திட்டம்

2016 – 2017 ஆம் ஆண்டில் நிகரக் கடன் அளவு 20.27 சதவிகிதம் அளவிற்கு உயர்ந்ததற்கு முக்கியக் காரணம் உதய் திட்டம் தான். உதய் திட்டத்தின் கீழ், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மானக் கழகத்தின் கடனான 22,815 கோடி ரூபாயை அரசு ஏற்றுக்கொண்டதன் விளைவாக, அந்த ஆண்டில் மட்டும் 60,298.09 கோடி ரூபாய் அளவிற்கு கடன் பெறப்பட்டது. இதில், 37,483 கோடி ரூபாய் மூலதனத் திட்டங்களுக்காகவும், பிறமக்கள் நலத்திட்ட செலவினங்களுக்காகவும் பயன்படுத்தப்பட்டது.

மீதமுள்ள 22,815 கோடி ரூபாய் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மானக் கழகத்திற்கு கடனாக வழங்கப்பட்டது. 2017–2018 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடுகளிலும், 2018 –2019 ஆம் ஆண்டு வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளிலும் மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் கடனின் விகிதாச்சாரம் அதிகரித்து வருவதற்கான முக்கியக் காரணம் ஊதியத் திருத்தங்களால் சம்பளங்கள் மற்றும் ஓய்வூதியப்பலன்களில் ஏற்பட்ட பெருமளவு உயர்வுதான்.

### வருவாய் உயர்வு இல்லை

இந்த செலவினங்களில் ஏற்பட்ட உயர்வை சமாளிக்கக்கூடிய அளவிற்கு வருவாய் வரவினங்களில் உயர்வு இல்லை. அதனால் கடன் அளவு இவ்விரு ஆண்டுகளிலும் அதிகரித்துள்ளது. மேலும், வருவாய் வரவுகளில், குறிப்பாக மதுபானக் கடைகளிலிருந்து கிடைக்கப் பெறும் வணிக வரிகளிலும் ஆயத்தீர்வைகளிலும் வளர்ச்சி விகிதம் கணிக்கப்பட்ட அளவுக்கு இல்லாததால் கடன் சுமை அதிகரித்துள்ளது.

பொதுவாக, மற்ற மாநிலங்களிலும் ஊதியத் திருத்தங்களால் நிதிப் பற்றாக்குறை அதிகரித்துள்ளது. மேலும், பொருளாதார சூழ்நிலையில் நல்ல மாற்றம் ஏற்பட்டு வரும் நிலையில் வருவாய் வரவினங்களில் வளர்ச்சி விகிதம் அதிகரித்து பெறப்படும் கடன் அளவு எதிர்காலத்தில் குறைய வாய்ப்பு உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### கவலை தேவையில்லை

இதனால், நிதிப் பற்றாக்குறையும் நிலுவைக்கடனும் ரூபாய் மதிப்பின் அளவில் அதிகரித்தாலும் மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் நிதிப் பற்றாக்குறை விகிதமும் நிலுவைக்கடன் விகிதமும் கட்டுப்பாட்டுக்குள் இருக்கிறதென்பதனையும், கடனுக்குரிய வட்டியை செலுத்துவதற்குரிய தகுதி நிலையையும் நாம் பெற்றிருக்கிறோம் என்பதனையும், இதைப்பற்றி யாரும் கவலைப்பட வேண்டாம் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தக் கடன் மற்றும் நிதிப் பற்றாக்குறை, வருவாய்ப் பற்றாக்குறைக்கு என்னுடைய பதிலுரையில் விளக்கமாகச் சொல்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் கூறியுள்ளார்.



தண்டையார்பேட்டை சி.ஜி.காலனி மீனவர் கிராம நல சபை புதிய நிர்வாகிகள் சார்பில் 43வது கிழக்கு வட்டம் காசிமேடு மீனவ குடும்பங்களுக்கு அவைத்தலைவர் இ.மதுசூதனன், வடசென்னை வடக்கு (கிழக்கு) மாவட்ட கழக செயலாளர் ஆர்.எஸ்.ராஜேஷ், ஆகியோர் தலா 10 கிலோ அரிசி மூட்டைகளை வழங்கினர். நிகழ்ச்சியில் பகுதி செயலாளர் ஆர். எஸ்.ஜனார்த்தனம், ஏ.கணேசன், வி.அலெக்ஸ், எஸ்.எம். முருகன், ஆர்.வி.அருண்பிரசாத், சந்தனசிவா, பி.மோகன், கே.சுப்பிரமணி, கிராம சங்க புதிய நிர்வாகிகளான தலைவர் பி.ஜெகன், செயலாளர் டி.வேலாயுதம், பொருளாளர் வி.அறிவழகன் ஆகியோர் உடன் உள்ளனர்.

# காஞ்சீபுரம் மாவட்டத்தில் வங்கிகள் மூலம் ரூ.4,960 கோடி கடன் வழங்க இலக்கு : கலெக்டர் தகவல்

காஞ்சீபுரம், ஜூலை 6–

காஞ்சீபுரம் மாவட்டத்தில் வங்கிகள் மூலம் இந்த நிதியாண்டிற்கு ரூ.4,960 கோடி கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என மாவட்ட கலெக்டர் பா.பொன்னையா தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு வருடமும் மாவட்டத்தில் வெவ்வேறு திட்டங்களின் கீழ் அனைத்து வங்கிகளும் அளிக்க இருக்கின்ற கடன்கள் பற்றிய திட்டக்குறியீடு மாவட்ட முன்னோடி வங்கியினால் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டு வருகின்றது. அதுபோன்று இவ்வருடத்திற்கான கடன் வழங்கும் இலக்கு ரூ.4,960 கோடி நிர்ணயம் செய்யப்பட்டு, தயாரிக்கப்பட்ட திட்ட அறிக்கையினை மாவட்ட கலெக்டர் பா.பொன்னையா வெளியிட்டார்.

இதுகுறித்து மாவட்ட கலெக்டர் பா.பொன்னையா வெளியிட்டுள்ள செய்திகுறிப்பில் கூறியிருப்பதாவது:



காஞ்சீபுரம் மாவட்டத்தில் இந்த நிதியாண்டில் விவசாயக் கடனாக 2380.70 கோடி ரூபாயும், விவசாயம் சாரா தொழில்களுக்கு 1266.67 கோடி ரூபாயும் மற்றும் பிற முன்னுரிமை கடனாக 1312.78 கோடி ரூபாயும் ஆக மொத்தம் 4960.15 கோடி கடனாக வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இதில் இந்தியன் வங்கி மூலமாக ரூ.1132.92 கோடியும், பாரத ஸ்டேட் வங்கி மூலமாக ரூ.932.61 கோடியும், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மூலமாக ரூ.865.98. கோடியும், கனரா வங்கி மூலமாக ரூ.743.63 கோடியும், ஐசிஐசிஐ வங்கி மூலமாக ரூ.68.32 கோடியும் அடங்கும். இந்த இலக்கானது கடந்த வருடத்தைவிட 1130.88 கோடி ரூபாய் அதிகமாகும். இக்கடன் திட்டத்தினை ஏழை எளிய மக்களும், விவசாயிகளும், இளைஞர்களும் பயன்பெறும் வகையில் அனைத்து வங்கிகளும், பல்வேறு அரசுத்துறையினரின் ஒத்துழைப்போடு இதனை முழுமையாக நிறைவேற்ற வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.


EIH அசோசியேட்டட் ஹோட்டல்ஸ் லிமிடெட்
பதிவு அலுவலகம்: 1/24, ஜி.எஸ்.டி ரோடு, மீனம்பாக்கம், சென்னை–600027.
CIN: L92490TN1983PLC009903
வெப்சைட்: www.eihassociatedhotels.in
போன் : 91–44–22344747, பேக்ஸ்: 91–44–22346699

அறிவிப்பு

செக்யூரிடீஸ் அண்ட் எக்சேஞ் போர்டு ஆப் இந்தியா (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015ன் விதி 29 மற்றும் 47ன்படி, இதர அலுவல்களுக்கு இடையே 30 ஜூன், 2018ல் முடிந்த காலாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளை பரிசீலித்து, ஒப்புதல் அளித்து பதிவு செய்ய கம்பெனி இயக்குனர்கள் குழுவின் கூட்டம் வெள்ளிக்கிழமை, 3 ஆகஸ்ட் 2018 அன்று நடைபெறும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

இந்த அறிவிப்பு கம்பெனியின் இணையதளம் www.eihassociatedhotels.in மற்றும் ஸ்டாக் எச்சேஞ்சுகளின் இணைய தளம் www.bseindia.com மற்றும் www.nseindia.comலும் உள்ளது.

EIH அசோசியேட்டட் ஹோட்டல்ஸ் லிமிடெட்டுக்காக
இந்த்ராணி ரே
கம்பெனி செயலாளர்

6 ஜூலை 2018



**BEFORE THE SUB-COURT AT TAMBARAM**
**H.M.O.P.No.487 OF 2017**

Balameenakshi ... Petitioner.
Vs.
R.Ravi ... Respondent.

To.
R.Ravi
S/o.Late.S.Radhakrishnan,
No.3, Ramakrishnapuram,
IInd Street, West
Mambalam Chennai-33

The aforesaid petition has been filed by the Petitioner above named for Divorce against the Respondent and the said petition stands posted to 12.7.2018 at 10.30 a.m. for your appearance either in person or through a duly instructed counsel, failing which the suit would be decided in your absence at your cost and consequences.

**G.GANESH KUMAR**
**RAJASRI GANESH KUMAR**
COUNSEL FOR PETITIONER/ PLAINTIFF



**மெட்ராஸ் உயர்நீதிமன்றம்**
**(ஆர்டினரி ஒரிஜினல் சிவில் ஜூரிஸ்டிக்ஷன்)**
**C.S.No.653/2017**

M/s.அர்தா ரியல் எஸ்டேட்
நெ.110/37, சாலிடர் பில்டிங்,
சர்வீஸ் ரோடு, அவுட்டர் ரிங் ரோடு,
மரத்தஹள்ளி, பெங்களூரு–560037
...வாதி

எதிர்

Mr.D. தினகரன், புரொப்ரைட்டர்
M/s.கிரீன் அவின்யூ ஹோம்ஸ் அண்ட் கார்டன்ஸ், நெ.39C,
2வது மாடி, K.B.தாசன் ரோடு,
தேனாம்பேட்டை,
சென்னை–600 018
...பிரதிவாதி

மேற்படி வழக்கு பிரதிவாதியிடம் இருந்து ரூ.4,71,34,690/– மற்றும் அதற்குண்டான வட்டி, செலவுத் தொகை கேட்டு பிரதிவாதிக்கு எதிராக வாதி தாக்கல் செய்துள்ளார். இவ்வழக்கில் பிரதிவாதி மீது பலமுறை சம்மன் நேரடியாகவும் நீதிமன்றம் மூலமும் எடுக்கப்பட்டு மேற்படி சம்மன் சார்வ் ஆகாததால் நாளிதழ் மூலம் அறிவிப்பு அனுப்ப உத்தரவாகி உள்ளது. மேற்படி வழக்கு மேற்படி நீதிமன்றத்தில் வரும் 20.07.2018 அன்று காலை 10.30 மணியளவில் மேற்படி நபரின் வருகைக்காக வாய்தா போடப் பட்டுள்ளது. அன்று பிரதிவாதி நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமோ அல்லது தங்கள் ஆட்சேபணையை தெரிவித்துக் கொள்ளலாம். அவ்வாறு தவறும் பட்சத்தில் இந்த வழக்கு பிரதிவாதிக்கு எதிராக தீர்மானிக்கப் படும் என்பதை அறியவும்.

**கே.ஜி.வாசுதேவன்**
வாதியின் வழக்கறிஞர்



IDFC
IDFC BANK

**ஐடிஎப்சி பேங்க் லிமிடெட்**

CIN: U65110TN2014PLC097792 email: bank.info@idfcbank.com website: www.idfcbank.com
பதிவு அலுவலகம்: கேஆர்எம் டவர், 7வது தளம், எண். 1, ஹாரிங்டன் ரோடு, சேத்துப்பட்டு, சென்னை–600 031.
போன் : +91 44 4564 4000 பேக்ஸ் : +91 44 4564 4022
கார்பொரேட் அலுவலகம்: நாமன் சேம்பர்ஸ், C–32, G–பிளாக், பந்த்ரா–குர்லா காம்ப்ளக்ஸ், பந்த்ரா (E), மும்பை–400 051.
போன் : +91 22 7132 5500 பேக்ஸ் : +91 22 2654 0354

**அறிவிப்பு**

வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் கண்டுள்ள அலுவல்களை செயல்படுத்த ஐடிஎப்சி பேங்க் லிமிடெட் ('ஐடிஎப்சி பேங்க்' அல்லது 'வங்கி') உறுப்பினர்களின் 4–வது வருடாந்திர பொதுக்கூட்டம் செவ்வாய்க்கிழமை, ஜூலை 31, 2018 அன்று காலை 10.30 மணிக்கு சர் முத்த வெங்கடசுப்பா ராவ் கன்சர்ட் ஹால் (லேடி ஆண்டாள் பள்ளி வளாக உட்புறம்), ஷென்ஸ்டோன் பார்க், 13/1, ஹாரிங்டன் ரோடு, சேத்துப்பட்டு, சென்னை–600031, தமிழ்நாடு, இந்தியா என்ற முகவரியில் நடைபெறும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. மேலும், அறிவிப்பு, நிதி ஆண்டு 18க்கான வருடாந்திர அறிக்கை மற்றும் இதர தொடர்புடைய ஆவணங்களை அனுப்பும் பணியை கம்பெனி ஜூலை 5, 2018 அன்று முடித்துள்ளது. வங்கி/முதலீட்டு பங்கேற்பாளர்களிடம் பதிவு செய்துள்ள இமெயில் முகவரியில் உள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் மேற்கண்ட ஆவணங்கள் மின்னணு முறையில் அனுப்பப்பட்டுள்ளது. மேற்சொன்ன ஆவணங்கள் வங்கியின் இணைய தளம் www.idfcbank.com மற்றும் கார்வி கம்ப்யூட்டர்ஷேர் பிரைவேட் லிமிடெட்டின் ('Karvy') இணைய தளம் https://evoting.karvy.comலும் உள்ளது.

கம்பெனிகள் சட்டம், 2013 பிரிவு 91 மற்றும் இதர பொருந்தக்கூடிய விதிகள், செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள், 2015ன் விதி 42ன்படி, 2017–18 நிதி ஆண்டுக்கு ஈக்விடி பங்குகள் மீது டிவிடெண்ட் பெற தகுதி உடைய உறுப்பினர்களின் பெயர்களை தீர்மானிக்க உறுப்பினர்கள் பதிவேடு மற்றும் பங்கு பரிமாற்ற புத்தகங்கள் புதன்கிழமை, ஜூலை 25, 2018 முதல் செவ்வாய்க்கிழமை, ஜூலை 31, 2018 முடிய (இரு நாட்களும் சேர்த்து) மூடப்பட்டிருக்கும் என்று இதன் மூலம் மேலும் அறிவிக்கப்படுகிறது. மார்ச் 31, 2018ல் முடிந்த நிதி ஆண்டுக்கு இயக்குனர்கள் குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட 7.5% டிவிடெண்ட் அதாவது ஒவ்வொன்றும் ரூ.10 மதிப்புள்ள ஒரு ஈக்விடி பங்கிற்கு ரூ.0.75 பைசா, 4வது வருடாந்திர பொதுக்கூட்டத்தில் உறுப்பினர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்டால், செவ்வாய்க்கிழமை, ஜூலை 31, 2018 அன்றோ அல்லது அதற்கு பிறகோ பங்கு வைத்துள்ள உறுப்பினர்களுக்கு வழங்கப்படும்.

– டீமெட்டிரிலைஸ்ட் படிவத்தில் பங்குகளை வைத்துள்ளவர்களை பொறுத்த வரையில் நேஷனல் செக்யூரிடீஸ் டெபாசிட்டரி லிமிடெட் மற்றும் சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட்டிலிருந்து பெறப்படும் பயனடையும் உரிமையாளர் விவரங்கள் அடிப்படையில், செவ்வாய்க்கிழமை, ஜூலை 24, 2018 அன்று அலுவல் நேரம் முடியும் வேளையில் கண்டுள்ள பெயர்கள்.
– பிசிகல் படிவத்தில் பங்குகளை வைத்துள்ளவர்களை பொறுத்தவரையில், செவ்வாய்க்கிழமை, ஜூலை 24, 2018 அன்று அலுவல் நேரம் முடிவதற்குள் உறுப்பினர் பதிவேட்டில் கண்டுள்ள பெயர்கள்.

கம்பெனிகள் சட்டம் 2013 பிரிவு 108 மற்றும் கம்பெனிகள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள் 2014, விதி 20 மற்றும் செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள், 2015ன் விதி 44ன்படி, கூட்டம் நடைபெறும் இடம் தவிர வேறு இடத்தில் இருந்தால் (ரிமோட் மின்னணு வாக்குப்பதிவு) வங்கியின் 4வது வருடாந்திர பொதுக்கூட்டத்தில் நிறைவேற்ற திட்டமிட்டுள்ள அனைத்து அல்லது ஏதாவது ஒரு தீர்மானம் மீது மின்னணு வாக்குப்பதிவு முறையில் வாக்குகளை பதிவு செய்யும் வசதிகள் பிசிகல் அல்லது டீமெட்டிரிலைஸ்ட் முறையில் பங்குகளை வைத்துள்ள உறுப்பினர்களுக்கு செய்யப்பட்டுள்ளது. கார்வி–யின் ரிமோட் மின்னணு வாக்குப்பதிவு சேவைகளை வங்கி பெற்றுள்ளது. ரிமோட் மின்னணு வாக்குப்பதிவு வியாழக்கிழமை, ஜூலை 26, 2018 அன்று காலை 9.00 மணிக்கு தொடங்கி திங்கட்கிழமை, ஜூலை 30, 2018 அன்று மாலை 5.00 மணிக்கு முடிவடைகிறது. அதன் பின்னர் ரிமோட் மின்னணு வாக்குப்பதிவை கார்வி செயலிழக்க செய்துவிடும் மற்றும் ஜூலை 30, 2018 அன்று மாலை 5.00 மணிக்கு பின்னர் வாக்குப்பதிவு அனுமதிக்கப்படமாட்டாது. உறுப்பினர் ஒரு தீர்மானத்தின் மீது வாக்களித்துவிட்டால் பின்னர் அதனை மாற்ற அனுமதிக்கப்படமாட்டார் மற்றும் மறுபடியும் வாக்களிக்க முடியாது. வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்புடன் அனுப்பப்பட்டுள்ள ''ரிமோட் மின்னணு வாக்குப்பதிவிற்கான வழிமுறைகளில்'' (யூசர் ஐடி மற்றும் பாஸ்வேர்ட் உட்பட) ரிமோட் மின்னணு வாக்குப்பதிவு மற்றும் மின்னணு வாக்குப்பதிவு விவரங்கள் அளிக்கப்பட்டுள்ளன. மேற்சொன்ன ஆவணங்கள் வங்கியின் இணைய தளம் மற்றும் கார்வி இணைய தளத்திலும் உள்ளது. மேலும், ரிமோட் மின்னணு வாக்குப்பதிவின் மூலம் வாக்களிக்காத உறுப்பினர்கள் இசைவு/இசைவின்மை படிவம் மூலமாக வருடாந்திர பொதுக்கூட்டத்தில் வாக்களிக்கும் வசதி உள்ளது. ரிமோட் மின்னணு வாக்குப்பதிவின் மூலமாக வாக்களித்த உறுப்பினர்கள் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் பங்கேற்கலாம் ஆனால் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் மீண்டும் வாக்களிக்க உரிமை கிடையாது. வாக்குப்பதிவு நேர்மையாகவும் வெளிப்படையான முறையிலும் நடைபெற திரு. பி. நரசிம்மன், பிராக்டிசிங் கம்பெனி செயலாளர், அவர்களை ஆராய்வாளராக வங்கியின் இயக்குனர்கள் குழு நியமனம் செய்துள்ளது.

கட் ஆப் தேதியான செவ்வாய்க்கிழமை, ஜூலை 24, 2018 அன்று உறுப்பினர்கள் பதிவேடு/பயனுள்ள உரிமையாளர்கள் பட்டியலில் கண்டுள்ள பெயர்களில் உள்ள பங்குதாரர்கள் மட்டுமே வருடாந்திர பொதுக்கூட்டத்தில் ரிமோட் மின்னணு வாக்குப்பதிவு மற்றும் வாக்குப்பதிவு அளிக்கும் உரிமை பெற்றவர்கள் ஆவர். அறிவிப்பு அனுப்பிய பிறகு வங்கியின் உறுப்பினரான நபர் மற்றும் கட் ஆப் தேதியான, ஜூலை 24, 2018 அன்று பங்குகளை வைத்துள்ளவர்கள் கம்பெனி செயலாளர் அவர்களுக்கு bank.info@idfcbank.com என்ற முகவரிக்கு கோரிக்கை அனுப்பி உபயோக ஐடி மற்றும் பாஸ்வேர்டை பெற்றுக் கொள்ளலாம். மேலும், வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு மற்றும் வருகை சீட்டை பெறாத உறுப்பினர் மாற்று வருகை சீட்டு மற்றும் உபயோக ஐடி மற்றும் பாஸ்வேர்டை கம்பெனி செயலாளரிடமிருந்து கோரி பெற்றுக் கொள்ளலாம். உபயோக ஐடி மற்றும் பாஸ்வேர்ட் பெறுவதற்கான விவரமான நடைமுறைகள் வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் அளிக்கப்பட்டுள்ளது. அவை வங்கியின் இணையதளம் மற்றும் கார்வியின் இணையதளத்தில் உள்ளது.

உறுப்பினர்களுக்கு மின்னணு வாக்குப்பதிவு தொடர்பாக ஏதேனும் சந்தேகம்/குறை இருப்பின் அது குறித்து https://evoting.karvy.com (Karvy's website)யின் எப்ஏக்யூ பிரிவை பார்வையிடலாம் அல்லது திரு. எம்.ஆர்.வி. சுப்ரமண்யம், தலைமை செயல்பாடுகள்– கார்ப்பரேட் ரிஜிஸ்திரி, கார்வி கம்ப்யூட்டர்ஷேர் பிரைவேட் லிமிடெட் (யூனிட் : ஐடிஎப்சி பேங்க் லிமிடெட்), கார்வி செலினியம் டவர் B, மனை 31 & 32, கச்சிபோவ்லி, நிதி மாவட்டம், நானக்ராம்குடா, செரிலிங்கம்பள்ளி, ஐதராபாத்–500 032, Tel: +91 40 6716 1500, 3321 1000 Fax: +91 40 2342 0814, +91 40 3321 1000, Toll Free No.: 1800 345 4001, email: einward.ris@karvy.comல் அணுகலாம் / அல்லது bank.info@idfcbank.comக்கு எழுதலாம்.

ஐடிஎப்சி பேங்க் லிமிடெட்டுக்காக
ஒப்பம்/–

இடம்: மும்பை
தேதி: ஜூலை 5, 2018

மஹேந்திரா என். ஷா
கம்பெனி செயலாளர்





# இரட்டைமலை சீனிவாசன் பிறந்த நாள்

**நாள்** : 7.7.2018 சனிக்கிழமை
**நேரம்** : காலை 10.00 மணி
**இடம்** : காந்தி மண்டப வளாகம், கிண்டி, சென்னை

தமிழ்நாடு அரசின் சார்பில்
**இரட்டைமலை சீனிவாசன்** அவர்களின்
திருவுருவச் சிலைக்கு
**மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள்**,
நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள்,
மற்றும் சீர்மிகு பெருமக்கள்
மலர் தூவி மரியாதை செலுத்துவார்கள்.

அனைவரும் வருக!

செ.ம.தொ.இ/869/வரைகலை/2018

இயக்குநர்
செய்தி-மக்கள் தொடர்புத்துறை,
சென்னை - 600 009.



IDFC
IDFC LIMITED

**ஐடிஎப்சி லிமிடெட்**

CIN: L65191TN1997PLC037415 email: info@idfc.com, Website: www.idfc.com
பதிவு அலுவலகம்: கேஆர்எம் டவர், 7வது தளம், எண். 1, ஹாரிங்டன் ரோடு, சேத்துப்பட்டு, சென்னை-600 031. தொலைபேசி எண்: + 91 44 4564 4000. பேக்ஸ்: + 91 44 4564 4022
கார்பொரேட் அலுவலகம்: நாமன் சேம்பர்ஸ், C-32, G-பிளாக், பந்த்ரா-குர்லா காம்ப்ளக்ஸ், பந்த்ரா–கிழக்கு, மும்பை-400 051. தொலைபேசி எண்: + 91 22 4222 2000 பேக்ஸ்: + 91 22 2654 0354

**அறிவிப்பு**

2015ம் வருடத்திய செக்யூரிட்டீஸ் அண்டு எக்சேஞ் போர்டு ஆப் இந்தியா (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள், விதி 29 மற்றும் விதி 47 (1) (ஏ) ஆகியவற்றின்படி இதர அலுவல்களுக்கு இடையே ஜூன் 30, 2018 அன்று முடிவடைந்த காலாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளை (தணிக்கையாளர்களின் மறுவரையறுக்கப்பட்ட ஆய்விற்குட்பட்டது) விவாதித்து ஒப்புதல் வழங்க ஐடிஎப்சி லிமிடெட்டின் 124வது இயக்குனர்கள் குழு கூட்டம் **திங்கட்கிழமை, ஜூலை 30, 2018** அன்று சென்னையில் நடைபெறும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள் மீது முதலீட்டாளர்/ஆய்வாளர் அழைப்பு கூட்டத்தை ஆகஸ்ட் 1, 2018 அன்று கம்பெனி நடத்தும். மேற்சொன்ன கூட்ட அறிவிப்பு ஐடிஎப்சி–யின் இணைய தளம் www.idfc.com மற்றும் நேஷனல் ஸ்டாக் எக்சேஞ் ஆப் இந்தியா லிமிடெட்டின் இணையதளம் www.nseindia.com மற்றும் பிஎஸ்சி லிமிடெட்டின் இணைய தளம் www.bseindia.com ஆகியவற்றில் வெளியிடப்பட்டுள்ளது.

**ஐடிஎப்சி லிமிடெட்டுக்காக**
**ஒப்பம்**/

இடம்: மும்பை
தேதி : ஜூலை 5, 2018

**அமோல் A. ரானடே**
கம்பெனி செயலாளர்



**PUBLIC NOTICE**

This is to inform that my client Mr.P.Seenivasan, residing at 111k/24j, Polepettai East, Thoothukudi, Pin 628 002 is the joint owner along with his 4 brothers in respect of property situated at Servaikaranmadam Village, Thoothukudi Taluk and District, comprised in New Survey No.213 measuring 7 Acres and 9 cents, he having acquired the same by way of sale vide Document No.1296 of 2000 on the file of the Sub Registrar, Pudukkottai, Thoothukudi District and have been in joint possession and enjoyment of the same since then.

It is informed that my client Mr.Srinivasan has lost the original sale deed Document No.1296 of 2000 on the file of the Sub Registrar, Pudukkottai, Thoothukudi District, while he was travelling in an autorickshaw at Gill Nagar III Street, Choolaimedu, Chennai 600094 on 02.07.2018. The same could not be traced by him inspite of diligent search. My client states that he has not created any encumbrance, charge or mortgage on the said property. Anyone having any interest or claim on the same, or in possession of the said document, is hereby called upon to file their objections with documentary proof to the undersigned within TEN days from this date, failing which it will be presumed that the above said original document is lost. Finder is requested to hand over the same either to me at the below mentioned address (or) to my client at the above address. Finder will be rewarded suitably.

**G.Ramalingam**
Advocate and Notary Public
Egmore Bar Association Chennai



**PUBLIC NOTICE**

This public notice is issued on behalf of my client Mr.Lokesh Kumar, residing at No.253/1, Pioneer Colony, Anna Nagar West Extension, Chennai-600101. He misplaced the original sale deed dated 24.02.1992 vide Doc.No. 566/1992 SRO at Ponneri executed by Alingappa and Sivaraj rep by their power agent Jayabal to Mrs.Ulagarasi in respect of the land measuring 12 cents in Survey No.108A/ 4A, New Survey No.108A/4A1 of Nallur Village. If anybody claiming right or title over the property may contact the undersigned with sufficient documentary proof within 7 days from the date of this publication, failing which it is construed that the said documents are missed and there is no claim over the said property. Any attempt to create encumbrance over the property by any person will not bind my client.

**M. BHARATHI MOHAN** Advocate,
No.401, P.H.Road, Aminjikarai, Chennai-29.
Ph.9381005645